நாள்- 17.08.2023

Case No. OS.211/2010 (PW1 cross )

PW.1 –வெங்கடசாமி – பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

என் தம்பி சிவாஜி நாராயணன் ஏற்கனவே பாகப்பிரிவினை கேட்டு முனிசிபல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. அந்த வழக்கில் நானும் பிரதிவாதியாக இருந்தேன் என்றால் 1995 அல்லது 1996 ல் தாக்கல் செய்த வழக்கில் நான் பிரதிவாதியாகத்தான் இருந்தேன். அந்த பாகப்பிரிவினை வழக்கு தள்ளுபடியாகிவிட்டதா என்றால் எனக்கு தெரியாது. என் தம்பியை விசாரித்தால் எதற்காக வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்ற விவரம் தெரியும். என் தம்பியும் சேர்த்துதான் வழக்கு நடத்துகிறார். 26.6.1992 ல் பதிவு செய்தவிடுதலை பத்திரம் எழுதி கொடுத்தேன் என்று சொன்னால் எனக்கு ஞாபகமில்லை. தாவா சொத்தில் ஆ அட்டவணையில் உள்ள சொத்து ஏலத்திற்கு விடப்பட்டது என்று சொன்னால் எனக்கு தெரியாது. அந்த சொத்தை 1ம் பிரதிவாதி பாஸ்கர் ரெட்டியாரின் மகன் ரமேஷ் என்பவர் ஏலம் எடுத்தவரிடமிருந்து சொத்தை வாங்கினார் என்பது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. நான் 1991 வரை நான் கிராமத்தில் இருந்தேன் அதன்பிறகு சென்னைக்கு சென்றுவிட்டேன். 1991 க்கு முன்பு நான் விவசாய வேலைதான் செய்து வந்தேன் என்றால் சரிதான். ஆரணியில் அரிசி வியாபாரம் என் அண்ணன் பாஸ்கர் ரெட்டியால் 1ம் பிரதிவாதி செய்து வந்தார். என்ன பெயரில் அரிசி வியாபாரம் செய்து வந்தார் என்று எனக்கு தெரியாது. அந்த இடத்திற்கு உண்டான லைசன்ஸ் மற்றும் இடம் யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது. அரிசி மில்லை என் அண்ணனுக்கு பிறகு அவரது மகன் நடத்திவருகிறார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. கண்ணமங்கலத்தை சேர்ந்த நாராயண ரெட்டியார் யார் என்று தெரியாது. என் அப்பா உயிருடன் இருக்கும் போது யார் யாரிடம் கடன் வாங்கினார் மற்றும் யார் யாரிடம் கடன் பாக்கி உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. என் அப்பாவிற்கு ஏற்பட்ட கடனை 1ம் பிரதிவாதி பாஸ்கர் ரெட்டியார் என் அண்ணன் தான் பைசல் செய்தார் என்றால் சரிதான். "C " செட்டியூல் சொத்து யார் பெயரில் உள்ளது என்றால் பாஸ்கர் ரெட்டியார் பெயரில் உள்ளது. "C " செட்டியூல் சொத்துக்கான பட்டாவும் அவர்பெயரில்தான் உள்ளது. "C " செட்டியூல் சொத்து எந்த ஆண்டு யாரிடம் இருந்து வாங்கப்பட்டது என்று சொன்னால் ராமசாமி ரெட்டியாரிடமிருந்து 1970 அல்லது 1971 ல் வாங்கப்பட்டது. அதன் விஸ்தீரனம் எனக்கு தெரியாது. "B" ஷெட்டியூல் சொத்து யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது. யாரிடமிருந்து எந்த ஆண்டு வாங்கப்பட்டது என்று சொன்னால் தண்டராம்பட்டு கிராமத்தில் என் அத்தை ரங்கம்மாள்ளிடமிருந்து 1973 ல் வாங்கப்பட்டது எனக்கு சரியாக வருடம் ஞாபகமில்லை. "B" ஷெட்டியூல் உள்ள நிலங்கள் யாரிடமிருந்து வாங்கப்பட்டது மற்றும் சர்வே எண்கள் தெரியுமா என்றால் ஆவணங்களை பார்த்தால் என்னால் சொல்லமுடியும். "B" ஷெட்டியூல் சொத்து தற்போது யாரிடம் உள்ளது என்றால் 1ம் பிரதிவாதி வாரிசிடம் உள்ளது.

சொத்து ஏலத்திற்கு வந்து அதில் நான் கோரிக்கை மனுவை தாக்கல் செய்து அது தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கில் சம்மந்தப்பட்ட அனைத்துவிவரங்கள் 1ம் பிரதிவாதிக்குதான் தெரியும் என்றால் அவர்தான் ஆவணங்களை வைத்திருந்தார். அவர் சொல்லிதான் ஏலம் சென்ற விவரம் எல்லாம் தெரியும். அந்த சொத்துக்களை 1ம் பிரதிவாதிதான் அனுபவித்து வந்தார் என்றால் இல்லை நான், என் தம்பி சிவாஜிநாராயணன் 2ம் பிரதிவாதி, 1ம் பிரதிவாதி பாஸ்கர் ரெட்டி, என் அண்ணன் பத்ராச்சலம் ரெட்டியார் ஆகியோர்கள் அனுபவித்து வந்தோம். நான் தற்போது பயிர் எதுவும் வைக்கவில்லை. என் தம்பிதான் பயிர் வைத்து வருகிறார். அவர் அனுபவத்தில் விட்டு நான் சென்னையில் இருக்கிறேன். நான் சென்னையில் செக்கியூரிட்டியாக இருந்து தற்போது வேலை எதுவும் செய்யவில்லை . என் தம்பி என்று சொல்வது 2வது வாதியான சிவாஜிநாராயணன் என்றால் சரிதான். ஏற்கனவே வழக்கு நடந்துமுடிந்துவிட்டது என்றும் 3வது சுற்று வழக்கு எனவே இந்த வழக்கு சொத்துக்களில் என்றும் பரிகாரம் பெற தகுதியற்றவர் என்று சொன்னால் சரியல்ல.

2,6 முதல் 8,10 முதல் 14 வரையான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

என்னுடைய தகப்பனார் பெயர் புருஷோத்தமரெட்டியார். அவருக்கு 4 மகன்கள் மற்றும் 4 மகள்கள். 1ம் பிரதிவாதி என்னுடைய பெரிய அண்ணன். அவர்தான் குடும்பத்தை நிர்வகித்து வந்தார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி பாஸ்கர்ரெட்டியார் இறந்தபிறகு பிரதிவாதிகள் 3 முதல் 5 மற்றும் 16வது பிரதிவாதிகள் அவருடைய வாரிசுகள் என்றால் சரிதான். 6 முதல் 8 பிரதிவாதிகள் என்னுடன் பிறந்த சகோதரிகள் என்றால் சரிதான். மற்றொரு சகோதரி பெயர் சரஸ்வதி அவர் இறந்துவிட்டார். சரஸ்வதியின் வாரிசுகள் செந்தாமரை, சிவாஜி, சாந்தி, கார்த்திகேயன் 9 முதல் 12 பிரதிவாதிகள். அதில் 9ம் பிரதிவாதி செந்தாமரை இறந்துவிட்டார். அவர் இறந்துவிட்டபிறகு அவரின் வாரிசுகள் 13 , 14 பிரதிவாதிகள் ஆவார்கள். என் அப்பா புருஷோத்தம ரெட்டியார் 1965ல் இறந்துவிட்டார். அவர் இறந்தபிறகு 1ம் பிரதிவாதி பாஸ்கர் ரெட்டியார்தான் குடும்பத்தை நிர்வகித்து வந்தார். 1991க்கு முன்பு வரை கூட்டு குடும்பத்தில் விவசாயம் செய்து வந்தேன். குடும்பத்தில் அனைவரும் கூட்டுக்குடும்பத்தில் விவசாயத்தை பார்த்து கொண்டார்கள் என்றால் சரிதான். என் தம்பி விவசாயத்தை பாத்த்துக்கெண்டபோது நான் அவ்வப்போது பார்த்துவிட்டு செல்வேன். தாவா சொத்தில் உள்ள A,B,C சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் அதை நானும், என் சகோதரிகள் அனுபவித்து வந்தோம் என்றால் சரிதான். தாவாவில் A,B அட்டவணை சொத்துக்கள் வீடு பாதி பூர்வீக சொத்து மீதி பாதி பூர்வீக சொத்தில் கிடைத்த வருமானத்திலிருந்து கிடைத்ததை வைத்து என்அப்பா பெயரில் வாங்கப்பட்டது. B, C அட்டவணை சொத்து பூர்வீக சொத்திலிருந்து கிடைத்த வருமானத்திலிருந்து வாங்கப்பட்டது. C அட்டவணை சொத்து என் அண்ணன் பெயரில் உள்ளது. A,B,C சொத்துக்கள் கூட்டுக்குடும்பத்திலிருந்து கிடைத்த வருமானத்தை வைத்து வாங்கப்பட்டது.

பாகப்பிரிவினை செய்யாமல் பொதுவாகத்தான் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். பாகம் பிரித்து கொடுக்கும்படி 1ம் பிரதிவாதியை கேட்டோம் அவ்வாறு பிரிக்காததால் வழக்கு தாக்கல் செய்தேன். எனக்கும், என் உடன் பிறந்தவர்களுக்கும் சமபாகத்தில் பாகப்பிரிவினை கிடைக்கும் என்றால் சரிதான். C அட்டவணை சொத்து என் அண்ணனின் தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல அதுவும் கூட்டுக்குடும்ப சொத்துதான். பிரதிவாதிகள் 2, 6 முதல் 8 மற்றும் 10 முதல் 16 ஆகியோருக்கு சட்டப்படி பாகப்பிரிவினை பெற தகுதியுடையவர்கள் என்றால் சரிதான்.

மறுவிசாரணை– இல்லை.